1975 அக்டோபர் 31]

சென்னை குழந்தைகள் மருத்துவமனை.

* 149 வினு—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள குழந்தைகள் மருத்துவ மனையை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) எழாது.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, சென்னையிலுள்ள இந்த குழந்தைகள் மருத்துவமனை சௌத்-ஈஸ்ட் ஏசியாவி லேயே ஒரு நல்ல மருத்துவமனை என்று பெயர் பெற்று இருக் கிறது. அங்கே பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் வந்து சிகிச்சை பெறுகிருர்கள். சில நேரங்களில் அதில் இடம் பெற முடியாமல் போகிருர்கள். ஆகவே, இருக்கிற இடத்திலாவது அதை மேலும் விஸ்தரித்துக் கட்டுவதற்கு அரசு முன்வருமா ? அல்லது அதை இன்னும் வசதியான இடத்திற்கு மாற்றுவதற்கு அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த மருத்துவமனை குறிப்பிட்ட அளவுக்கு நிதி செலவிட்டு கட்டப்பட்டு, வளர்ச்சி பெற்று செயல்படுகிற ஒன்ருகும். மேலும் மேலும் விரிவுபடுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்குப் பின் பகுதியில் தாய்-சேய் மருத்துவமனை செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அந்தப் பகுதியில் உள்ள இடத்தையும் அதோடு சேர்த்து, அதன் வளர்ச்சிக்கான புற நோயாளிகள் பகுதி கட்ட முடியுமா என்பது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, சென்னையில் இருக்கிற குழந்தைகள் மருத்துவமனை மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அந்த மருத்துவமனையில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு, மாவட்டத்தில் இருக்கும் தலைமை மருத்துவமனைகளில் குழந்தைகள் மருத்துவப் பிரிவு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சென்னையிலுள்ள மருத்துவ மனை 'டீச்சிங் ஆஸ்பிடல்' என்ற முறையில் தனி வளர்ச்சி பெற்று இருப்பதாகும். பல்வேறு முறைகளில், பல்வேறு துறைகளில் குழந்தைகளுக்கு வரும் நோய்கள் குறித்து சிறப்புப் படிப்பு படிக்கவும், சிறந்த முறையில் ஆராய்ச்சி நடத்தவும் வாய்ப்பாக இருக்கிறது. மாவட்ட மருத்துவ மனைகளில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தி, அதில் சிறந்த மருத்துவர்களைப் போட வேண்டுமென்று ஏற்கனவே திட்டமிட்டு, அது நடைமுறைக்கு வந்து கொண்டு இருக்கிறது.

புதுப்பேட்டையில் அரசு மருந்தகம்

* 150 வினா—**திரு. ஜி. ராமசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், புதுப்பேட்டையில் புதிதாக அரசு மருந்தகம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

தோப்பூர் காசநோய் மருத்துவ மனை

* 151. வினா—**திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகரின் அருகிலுள்ள தோப்பூர் டி. பி. மருத்துவ மனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், மதுரைக்கு அருகாமையில் இருக்கும் ஆஸ்டின்பட்டி டி. பி. ஆஸ்பிடல் ஒன்றுதான் மதுரை மாவட்டத்தில் இருக்கிறது. அதிலே இப்போது சாதாரணமாக